2006 ஜூலை 22] [பேராசிரியர் க. அன்பழகன்]

உரிய ஒத்துழைப்பினை நல்கி இணைந்து செயல்படவும் -- முடிவெடுத்து அறிவித்துள்ளது.

72. தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்குத் தேவையான பல்வேறு கட்டமைப்பு வசதிகள் செய்வது குறித்து அரசுக்குப் பரிந்துரைகள் அளிக்க இத்துறையின் பிரதிநிதிகளைக் கொண்ட மாநில தகவல் தொழில்நுட்பக் குழு (State Information Technology Task Force) ஒன்று அமைக்கப்படும்.

முற்பகல் 10–50

73. தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கேற்ப, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில்லாத ஒவ்வொரு வீட்டுக்கும் செப்டம்பர் 15 அறிஞர் அண்ணா பிறந்த நாள், செப்டம்பர் 17 தந்தை பெரியார் பிறந்த நாள் விழாக்களையொட்டி இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் செப்டம்பர் திங்கள் முதல் வாரத்திலேயே தொடங்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து செயல்படுத்தப்படும். தற்போது முதற்கட்டமாக வழங்கப்படவுள்ள 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு செலவாகும் தொகை அன்னியில் இத்திட்டத்திற்கு இந்த நடப்பாண்டிற்கு மட்டும் 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதிலிருந்து இத்திட்டம் தொடர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றப்படும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

74. இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை முறையாகக் கொள்முதல் செய்யவும் குறை நேராமல் விநியோகிக்கவும், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் தலைமையிலான இக்குழுவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு டி. சுதர்சனம், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. கோ.க. மணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. சி. கோவிந்தசாமி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. வை. சிவபுண்ணியம், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் திரு. கு. செல்வம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் திரு. எச். அப்துல் பாசித், புரட்சி பாரதம் சார்பில் திரு. பூவை மு. ஜெகன் மூர்த்தி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இக்குழு 27–6–2006 அன்று கூடி, இத்திட்டத்தை துவங்கிவைக்க முதற்கட்டமாக 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை, வெளிப்படையான தேசிய

ஒப்பந்தப்புள்ளி முறையில் கொள்முதல் செய்வது என்றும், அடுத்த கட்டமாக இத்திட்டத்திற்குத் தேவைப்படும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வெளிப்படையான சர்வதேச ஒப்பந்தப்புள்ளி (International Open Competitive Bidding) முறையில் கொள்முதல் செய்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தேசிய ஒப்பந்தப் புள்ளிகள் 21–7–2006–க்குள் பெறப்பட்டு, ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்படும். முதற்கட்டமாக, பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் உள்ள குடும்பத்தினருக்கும், சமத்துவபுரம் இதுவரை அமைக்கப்படாத நீலகிரி மாவட்டத்தில் அங்குள்ள மலைவாழ் பழங்குடி குடும்பங்களுக்கும், சென்னை மாநகரில் வடசென்னையில் ஒன்றும் தென் சென்னையில் ஒன்றுமாக, குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் உள்ள குடும்பங்களுக்கும், மாநிலத்திலுள்ள அனைத்து மறுவாழ்வு இல்லங்களில் வாழ்வோருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறு மற்றும் குறுந்தொழில்கள்

75. ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் சிறு மற்றும் குறுந்தொழில்கள் ஆற்றி வரும் முக்கியப் பங்கை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. தொழில் வளத்தில் பின்தங்கிய பகுதிகளில் ஏற்படுத்தப்படும் தொழில்களுக்கு கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது முதலீட்டு மானிய நிதியுதவி அளிக்கப்பட்டு வந்தது. இத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிவிப்புக்கு ஏற்ப தொழில்வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைக் கண்டறியத் தேவையான வரைமுறைகளைப் பரிந்துரை செய்ய அலுவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்று சிறுதொழில்களுக்கு முதலீட்டு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக ரூ.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளின் மேம்பாடு

76. சாலைகளை நன்கு பராமரிக்கவும், போக்குவரத்து அதிகமாக உள்ள நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தவும், பழைய பாலங்களைப் புதுப்பிக்கவும், புதிய பாலங்கள், குறிப்பாக இரயில்வே மேம்பாலங்கள் கட்டவும் இந்த அரசு தலையாய முன்னுரிமை அளிக்கும்.

77. சாலைப் பராமரிப்பு பணிகளுக்கு மட்டுமே இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.804 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும்,